


06.09. 2026

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் மிக விரைவாக செயல்படுத்தப்படுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- 2. தமிழகத்தில் காவலர் நல திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்படும் என முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.
- தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெறுவதாக அமைச்சர் டாக்டர் அருண் ராஜ் கூறியுள்ளார்.
- தஞ்சை, திருவாரூர், நாகை மயிலாடுதுறை மாவட்ட பாசனத்திற்காக கல்லணையிலிருந்து இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.
- சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர்

நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் மிக விரைவாக செயல்படுத்தப்படுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி ஸ்ரீராம் கல்லூரி நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் உரையாற்றிய அவர், குறிப்பாக ரயில்வே துறையை மின் மயமாக்கும் பணிகள் அதி விரைவாக நடைபெற்று வருவதாக கூறினார்.

அரசின் தெளிவான கொள்கை செயல்திட்டங்களால் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு எண்ணற்ற இளையோருக்கு புதிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தால் இறக்குமதி நாடு என்ற நிலையை தாண்டி அதிக அளவிலான ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா முன்னேறியுள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதமர் தற்போது இரண்டரை லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு ஸ்மார்ட் ஃபோன் ஏற்றுமதி நடைபெறுவதை எடுத்துரைத்தார்.

2014-ம் ஆண்டு 700 கோடி ரூபாயாக இருந்த பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி தற்போது 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவை எட்டியுள்ளதாக கூறினார்.

சிறிய எளிய இலக்குகளை தாண்டி தேச வளர்ச்சிக்கான மிகப்பெரிய சாதனைகளை தமது அரசு எட்டி வருவதாக கூறிய பிரதமர் மேற்காசிய சூழல் உலகளாவிய வர்த்தக

தேக்கநிலையின்போதும் இந்தியாவின் காலாண்டு பொருளாதார வளர்ச்சி 7.8 சதவிகிதமாக உள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

*************

கீர்த்தி வர்த்தன் சிங்

இந்தியா சவுதி அரேபியா இடையே மனிதவளம், திறன் மேம்பாடு, பருவநிலை மாற்ற செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பரஸ்வர ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும் என மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்த்தன் சிங் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் பயணமாக சவுதி அரேபியா சென்றுள்ள அவர், இரு நாடுகளுக்கிடையே ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் குறித்த முக்கிய பேச்சுவார்த்தைகள் தமது இந்த பயணத்தின்போது மேற்கொள்ளப்படும் என்றார்.

சவுதி அரேபியாவில் பணிபுரியும் இந்திய தொழிலாளர்களின் நலன்களை பேணி காக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ள நிலையில் அங்கு பணியாற்றும் இந்திய தொழிலாளர்களுடனும் அமைச்சர் கலந்துரையாடுகிறார்.

*************

பிரிக்ஸ்

பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் முன்னோடியாக புதுதில்லியில் வரும் 12, 13, ஆம் தேதிகளில் பிரிக்ஸ் தொடக்க மாநாடு நடைபெறும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

500க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் உறுப்பு நாடுகளை சேர்ந்த நிதியமைச்சர்கள், வர்த்தக தலைவர்கள், பங்கேற்கும்

இந்த இரண்டு நாள் மாநாட்டில் முதலீட்டிற்கான வங்கி கட்டமைப்பு, ஒருங்கிணைப்பு, மின்னணு திறன், எரிசக்தி திட்டங்களை ஒருங்கிணைப்பது குறித்து விவாதிக்கப்படும்.

பிரிக்ஸ் நாடுகளின் பொருளாதார முறைகளில் எல்லை தாண்டிய முதலீடு, டாலர் முறை அல்லாத பண பரிவர்த்தனை குறித்தும் முக்கியமாக ஆலோசிக்கப்படுகிறது.

இந்தியா தலைமையில் 18ஆவது பிரிக்ஸ் உச்சிமாநாடு நடைபெறும் நிலையில் இந்த ஆலோசனைக்கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

*************

நேபாளம்

நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 344 ஆக உயர்ந்துள்ளது.

590 வெளிநாட்டினர் உட்பட காணாமல் போன ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோரை தேடும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இந்தியா, சீனா மீட்பு குழுவினர் இடிபாடுகளில் சிக்கியுள்ளோரை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள நிலையில் 10 நாட்களாக சேற்றில் புதைந்த 60 வயது பெண் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

*************

காவலர் நாள்

தமிழகத்தில் காவலர் நல திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்படும் என முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் தெரிவித்துள்ளார்.

காவலர் நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியில் அமைதியும், பாதுகாப்பும் நிறைவடைந்த மாநிலத்தை உருவாக்க மக்கள் காவல் துறைக்கு உறுதுணையாக திகழ வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

காவல்துறையினரின் பணிசுமையை குறைக்க நவீன தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்தப்படும் என கூறிய முதலமைச்சர் ஆபத்து மற்றும் பேரிடர் காலங்களில் மக்களின் உயிர், உடமை, உரிமைகளை பாதுகாக்கும் காவல்துறையினரின் வீரமும் தியாகமும் போற்றத்தக்கவை என்று பாராட்டியுள்ளார்.

1859-ஆம் ஆண்டு மெட்ராஸ் காவல் சட்டம் அமல்படுத்தப்பட்டு நவீன அமைப்பு ரீதியான காவல்துறை தோற்றுவிக்கப்பட்ட செப்டம்பர் 6ஆம் தேதி காவலர் நாளாக கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி பல்வேறு மாவட்டங்களில் காவல்துறையின் சிறப்பு அணிவகுப்புகள், வரலாற்று கண்காட்சிகள் நடைபெறுகின்றன.

*************

அருண் ராஜ்

தமிழகத்தில் கண் பார்வை இழப்பு தடுப்பிற்கான சிறப்பான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண் ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் கண் தான விழிப்புணர்வு பேரணியை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், உடல் உறுப்பு தானத்தில் நாட்டிலேயே தமிழகம் முதன்மை மாநிலகமாக திகழ்வதாக கூறினார்.

மாநிலத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெறுவதாக கூறினார்.

தமிகத்தில் த.வெ.க அரசு பொறுப்பெற்ற கடந்த 100 நாட்களில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக எதிர்கட்சி தலைவர் திரு.உதய நிதி ஸ்டாலின் ஒரு மாயையை ஏற்படுத்தி வருவதாக குற்றம் சாட்டினார்.

சட்டப்பேரவையில் தமது வாய்ப்பை அவர் சரியாக பயன்படுத்தவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

*************

தண்ணீர் திறப்பு – கல்லணை

கல்லணையிலிருந்து தஞ்சை, திருவாரூர், நாகை மயிலாடுதுறை மாவட்ட பாசனத்திற்காக தண்ணீரை மாநில அமைச்சர்கள் திரு.வினோத், திரு.ஷாஜகான் இன்று திறந்துவைத்தனர்.

இதன்மூலம் சுமார் 3 லட்சத்து 12 ஆயிரத்து 788 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இதனிடையே மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 8 ஆயிரத்து 612 கன அடியாக அதிகரித்துள்ளது.

டெல்டா பாசனத்திற்காக 7 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்படுகிறது.

நீர்மட்டம் 92.33 அடியாக உள்ளது.

*************

தொல் திருமாவளவன்

தமிழகத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு. தொல் திருமாவளவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் பிரதிநிதிகள், சட்டப்பேரவையில் ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட, உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கூறிய அவர், ஆணவ கொலை தடுப்பு மசோதா நடப்பு கூட்டத்தொடரில் வரையறுக்கப்படும் என்ற அறிவிப்பு மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

*************

நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்திற்குட்பட்ட நகராட்சிகளில் சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வாநிதி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

இருவரி

தேனி மாவட்டத்தில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்தம் இல்லங்களுக்கு சென்று குடிமை பொருள் வழங்கும் பணி நாளை நடைபெறும் என ஆட்சித்தலைவர் டாக்டர் வைத்தி நாதன் தெரிவித்துள்ளார்.

கிராமப்புற மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது உரிமைகளுக்காக ஓடுவோம் என்பதை வலியுறுத்தும் வகையில் கனவு மெய்பட வேண்டும் என்ற மாரத்தான் போட்டி ஈரோட்டில் இன்று நடைபெற்றது.

*************

உதகை

உதகையில் வார விடுமுறை நாளை ஒட்டி சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகரித்துள்ளது.

முதுமலை புலிகள் கப்பகம், பைக்காரா படகு இல்லம், தொட்டபெட்ரா சிகரம், ரோஜாபூங்கா, உதகை படகு இல்லம், அரசு தாவரவியல் பூங்கா உள்ளிட்ட இடங்களை ஏராளமானோர் கண்டு ரசித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இதேபோல் சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரியில் முக்கடல் சங்கமம், திருவள்ளுவர் சிலை, கண்ணாடி

இழைக்கூண்டு பாலம் உள்ளிட்ட இடங்களிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர்.

*************

கோவில்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் ஆவணி திருவிழாவின் 7ஆம் நாளான இன்று சண்முகநாதர் வெட்டி வேர் சப்பரத்தில் எழுந்தருளி ஏற்றம் காணும் நிகழ்ச்சி வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் இதில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

தொடர்ந்து இன்றுமாலை சுவாமி சிவப்பு சாத்தி அலங்காரத்தில் வீதி உலா நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

பேட்மிண்டன்

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை – சீன இணையை எதிர்கொள்கிறது.

அரையிறுதியில் இந்த இணை - மலேசிய இணையை 21-16 18-21 21-11 என்ற செட்களில் வென்றது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது